# அருள்மிகு
# ஆலையம்மன் திருக்கோயில்

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்று
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.

அமைவிடம்:-

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையின் தென்பகுதியில் ஆழ்வார்பேட்டை, தியாகராய நகர், சைதாப்பேட்டை, ஆயிரம் விளக்கு ஆகிய இடங்களுக்கு நடுவே உள்ளது. தேனாம்பேட்டை அருகே பனகல் பூங்காவிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் தியாகராய சாலை, அண்ணாசாலையோடு சேரும் இடத்தில் வலப்புறத்தில் அருள்மிகு அலைமேல் அமர்ந்தாள் ஆலயம் அழகுற காட்சியளிக்கிறது.

ஸ்தல சிறப்பு

தனிப் பெருந்தெய்வமாக சக்தி வழிபடப்படும் 108 தலங்களில் புகழ் வாய்ந்தவை. அருள்மிகு கருமாரியம்மன் எழுந்தருளியிருக்கும் திருவேற்காடு, அருள்மிகு காமாட்சி கொலு வீற்றிருக்கும் காஞ்சிபுரம், அருள்மிகு மாரியம்மன் அருளாட்சி செய்யும் சமயபுரம் என்பனவற்றிக்கு இணையான புகழ் பரப்பி வளர்ந்து வரும் தலமாக தேனாம்பேட்டை விளங்குகிறதென்றால் அதற்குக் காரணம் அங்கு அமைந்துள்ள அருள்மிகு அலைமேல் அமர்ந்தாள் என்ற ஆலையம்மன் திருக்கோயிலாகும்.

இத்திருக்கோயில் வரலாற்றை நாம் பின்னோக்கிப் பார்த்தால் பல அற்புதங்கள் நம் மனத்திரையில்

எழுகின்றன. அருள்மிகு அலைமேல் அமர்ந்தாள் சுயம்புவாகயாரும் தோற்றுவிக்காமல்-தன்னிச்சையாக தோன்றியவள். ஆனால் அவள் முதன் முதலில் தோன்றிய இடம் நமக்குத் தெரியவில்லை. அக்கோயிலில் தொண்டாற்றி வரும் அர்ச்சகர்களும், பிற பெரியவர்களும் சொல்வதை வைத்துப் பார்த்தால் அவள் சில பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தேனாம்பேட்டையில் நிலைகொண்டிருக்க வேண்டும்.

பிரார்த்தனை சிறப்பு

குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு ஆலையம்மனை தரிசித்தால் குழந்தை பாக்கியம் கிட்டும் என்பது இவ்வலயத்தின் சிறப்பு அம்சமாகும்.